# "நாட்டார் பழமொழிகளும் சமூகப் பண்பாட்டுக் கூறுகளும் : தமிழ் - சிங்கள நாட்டார் பழமொழிகளை அடிப்படையாகக் கொண்டதோர் ஆய்வு"

**Supervisor**
*Mrs. Rahila Ziyad,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

**Researcher**
*Ms. MIF. Safna,*
*Department of Languages,*
*Faculty of Arts & Culture,*
*SEUSL*

## ஆய்வுச் சுருக்கம்

கிராம மக்களின் மரபு வாழ்விலிருந்து பிறக்கும் வாய்மொழி இலக்கியங்களையே நாட்டார் இலக்கியம் என்கின்றோம். இவ்விலக்கியம், சமூகத்தின் அறிவியலையும் வாழ்வியலையும் படம் பிடித்துக் காட்டும் அளவுகோலாகும். நாட்டார் இலக்கியங்களை பல்வேறு வகையாக பிரித்து நோக்கலாம். அவற்றில் மிகக் குறுகிய வடிவைக் கொண்ட நாட்டார் இலக்கிய வடிவமாகப் பழமொழி காணப்படுகின்றது. பழமொழிகள் ஆழமான கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுகின்றன. கிராம மக்கள் தமது அன்றாட பேச்சில் நிறையப் பழமொழிகளைக் கலந்து பேசுகின்றனர்.

இலங்கையில் தமிழ் - சிங்கள மொழி பேசும் மக்கள் வாழ்விலும் நாட்டார் பழமொழிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சிங்கள மொழியில் காணப்படும் பழமொழிகளில் அவர்களின் சமூகப் பண்பாட்டுக் கூறுகளை இனங்காண முடியும். அதேபோல் தமிழ் மொழி பேசக் கூடிய மக்கள் மத்தியிலும் அதிகமான பழமொழிகள் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் மத்தியில் வழங்கப்படும் பழமொழிகளின், மொழிநடை, சொற்பயன்பாடு என்பன தமிழ் மக்கள் மத்தியில் பயன்படுத்தப்படும் பழமொழிகளின் மொழிநடை, சொற்பயன்பாடு என்பனவற்றிலிருந்து வேறுபடுவதை அவதானிக்க முடியும். இரு வேறுபட்ட சமூகங்களிலிருந்து பிறக்கும் பழமொழிகளில் அச்சமூகம் சார்ந்த சொற்பிரயோகங்கள் அல்லது அச்சமூகம் பின்பற்றும் மதம் சார்ந்த சொற்பிரயோகங்கள் அதிகம் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். மொழிக்கு மொழி பழமொழிகள் வேறுபட்டாலும் ஒரே பொருளை உணர்த்தக் கூடிய வகையில் தமிழ் - சிங்களப் பழமொழிகள் அதிகம் காணப்படுகின்றன.

மேலும் கிராம மக்களின் வாழ்வியலோடு கலந்துள்ள இப்பழமொழிகள், அவர்களின் பேச்சு மொழியிலேயே இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பழமொழிகள் சங்க காலம் முதலே தமிழ் இலக்கியத்தில் இடம்பிடித்துள்ளன. அதனால்தான் தொல்காப்பியமும் இப்பழமொழிகள் பற்றிப் பேசுகின்றது. சிலர் பழமொழிகளைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டாலும் அவை பற்றிய ஆய்வுகள் தமிழில் மிகக் குறைவாகவே உள்ளன. அதேவேளை, தமிழ் - சிங்களப் பழமொழிகளில் சமூகப் பண்பாட்டுக் கூறுகள் தொடர்பாக இதுவரை எவ்வித ஆய்வுகளும் இடம்பெறவில்லை.

தமிழ் - சிங்கள நாட்டார் பழமொழிகளில் சமூகப் பண்பாட்டுக் கூறுகள் எந்தளவிற்கு சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும், நாட்டார் இலக்கியத்தில் பழமொழிகள் பெரும் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டல், சிங்கள நாட்டார் பழமொழிகளை அறிமுகம் செய்தல், நாட்டார் பழமொழிகளில் மொழிப் பயன்பாடு எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆராய்தல் முதலிய உப நோக்கங்களையும் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கள ஆய்வின் மூலம் திரட்டப்பட்ட தமிழ் - சிங்கள நாட்டார் பழமொழிகளையும் நூல்களாக வெளிவந்துள்ள பழமொழித் தொகுப்புக்களையும் அடிப்படையாகக் கொண்டு

இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் விளக்கமுறை, சமூகவியல், ஒப்பீட்டு, மொழியியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வின் போது திரட்டப்பட்ட தகவல்களும், பழமொழிகளும், நூல்களில் எழுதப்பட்டுள்ள பழமொழிகளும் இரண்டாம் நிலைத் தரவுகளாக பழமொழிகள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் - சிங்கள மொழி பேசும் மக்களிடையே வழங்கப்படும் பழமொழிகளில் அம்மக்களின் சமூக, பண்பாட்டு அம்சங்களையும் தனித்துவமான பேச்சு மொழியினையும் இனங்காண முடியும்.

**Key Words**: நாட்டார் பழமொழிகள், சமூக - பண்பாட்டுக் கூறுகள்